# யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 10
## First Term Examination – 2020 – Grade 10

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ்மொழியும் இலக்கியமும் | 12 | T | I, II, III | 3 மணித்தியாலங்கள்<br>Three Hours |

சுட்டெண்
Index No

**தமிழ்மொழியும் இலக்கியமும்**

- ☐ இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- ☐ முதலாம், இரண்டாம் பகுதிகளிலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் **மூன்றாம்** பகுதியிலுள்ள ஐந்தாம், ஆறாம் வினாக்களுக்கும் 7, 8, 9 ஆம் வினாக்களுள் விரும்பிய **ஒரு** வினாவுக்கும் விடை எழுதுக.
- ☐ எழுத்து தெளிவில்லாதவிடத்தும் வழுவான மொழிநடைக்கும் புள்ளிகள் இல்லை.
- ☐ இவ்வினாத்தாளுக்குரிய மொத்தப் புள்ளிகள் 100

## பகுதி I

**1. சரியானது அல்லது மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து, தரப்பட்ட விடைத்தாளில் விடைக்குரிய எண்ணின் மேல் புள்ளடி (×) இடுக.**

01. "தெண்ணீர் **கயத்துச** சிறுமீன் சினையிலும்" இங்கு கயம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்

1) கடல் 2) குளம் 3) படை 4) வனம்

2. "தண்டேன் நுகரா மண்டூகம்" மண்டூகம் என்பதன் பொருள்

1) தவளை 2) ஆமை 3) வண்டு 4) முதலை

3. "மாக**மடங்கலும்** மால்விடையும்" இங்கு மடங்கல் என்பதன் பொருள்

1) ஆண்யானை 2) எருது 3) மேருமலை 4) ஆண்சிங்கம்

04. "நாயனையார் **கேண்மை** தழீஇக் கொளல் வேண்டும்" கேண்மை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்

1) கயமை 2) சேய்மை 3) பகைமை 4) பெருமை

5. "பிறிற்றோ தலை சிறந்த சட்ட **நிபுணன"** நிபுணன் என்பதன் பெண்பாற் சொல்

1) நிபுணி 2) நிபுணினி 3) நிபுணள் 4) நிபுணை

6. பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற தொகுதியைத் தெரிவு செய்க.

1) நாற்படை – குதிரை, யானை, தேர், காலாள்
2) நானிலம் - குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை
3) நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு
4) நாற்குணம் - அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு

7. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்துப்பெயர் கொண்ட நூல்களுள் ஒன்று.

1) நாலடியார் 2) நான்மணிக்கடிகை 3) இனியவை நாற்பது 4) திரிகடுகம்

8. குண்டு - வடவை என்னும் ஆண் பெண் மரபுப் பெயர்களைக் கொண்டது.

1) யானை 2) புலி 3) குதிரை 4) சிங்கம்


kalvi.lk

9. சுப்பர் மார்க்கட்டில் (Super Market) உள்ள பொருட்கள் தரம் வாய்ந்தவையாக உள்ளன. சுப்பர் மார்க்கட் என்பதன் தமிழ் வடிவம்

1) நாளங்காடி 2) அல்லங்காடி 3) சிறப்பங்காடி 4) எழிலங்காடி

10. பின்வருவனவற்றுள் ஒரு நூலில் இடம்பெற முடியாத உரை

1) முன்னுரை 2) பதிப்புரை 3) அணிந்துரை 4) தொடக்கவுரை

11. அகத்திலே தீய எண்ணங்களையும் புறத்திலே நல்ல குணங்களையும் காட்டி பகட்டு வாழ்க்கை வாழ்கின்றவர்களை விளக்கப் பொருத்தமான பழமொழி

1) இரவற் புடைவையிலே இது நல்ல கொய்யாரம்
2) ஊசி போகுமிடம் பார்ப்பார் உலக்கை போகுமிடம் பாரார்
3) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
4) ஒய்யாரக் கொண்டையிலே தாழம்பூவாம் உள்ளே இருக்குது ஈரும் பேனும்

12. பின்வருவனவற்றுள் ககரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்

1) கப்பல் 2) தங்கம் 3) கட்டில் 4) பக்கம்

13. கடும் மழை பொழிந்தது
கிணறுகள் நிறைவில்லை
இவ்விரு வாக்கியங்களையும் இணைக்கப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்

1) இருப்பினும் 2) ஏனென்றால் 3) ஆதலால் 4) வ ஆகவே

14. “புன்னகையே சமாதானத்தின் அறிகுறி” என்று அன்னை தெரேசா கூறினார். இது

1) கூட்டு வாக்கியம் 2) தனி வாக்கியம்
3) வியங்கோள் வாக்கியம் 4) கலப்பு வாக்கியம்

15. நான் நாளைக்குக் கண்டிக்குச் செல்கின்றேன். இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற வழு.

1) இடவழு 2) காலவழு 3) எண்வழு 4) காலவழு

16. கிழக்குப் பிரதேச வழக்கில் “துரவு” எனப்படுவது

1) சூட்டுக் களம் 2) ஆழம் குறைந்த நீர்ப்பகுதி
3) சிறுகேணி 4) பற்றை

17. பின்வருவனவற்றுள் நான்காம் வேற்றுமையாக அமையாதது.

1) இலங்கையில் நூற்றுக்கு எண்பது வீதத்திர் எழுத்தறிவு பெற்றுள்ளனர்.
2) ஜனாதிபதியின் வருகையின் பொருட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.
3) இலங்கையின் வடக்கில் இந்தியா இருக்கின்றது.
4) கர்ணனுக்கு நண்பன் துரியோதனன்.

18. எழுத்துப்பிழையற்ற வாக்கியத்தை தெரிவு செய்க.

1) மலை நாட்டில் பெய்து வரும் அடமழையினால் தாள்நிலப்பகுதிகள் வெல்லத்தில் மூழ்கியுள்ளன.
2) மலை நாட்டில் பெய்து வரும் அடைமழையினால் தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.
3) மலை நாட்டில் பெய்து வரும் அடைமழையினால் தால்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூள்கியுள்ளன.
4) மலை நாட்டில் பெய்து வரும் அடமளையினால் தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.


kalvi.lk

19. பொருள் மயக்கமற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.

1) காலஞ் சென்ற கந்தசாமியின் தந்தையை எனக்குத் தெரியாது.

2) நடமாடும் ஆட்பதிவுத்திணைக்களத்தின் சேவை இன்று வவுனியாவில் நடைபெறுகின்றது.

3) முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி இலங்கைக்கு வருகை தந்தார்.

4) பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்

20. பின்வருவனவற்றுள் சாரியை என்னும் உறுப்பு இடம்பெற்ற பகுபதம்.

1) நடந்தான் 2) படித்தனன் 2) எழுதினாள் 4) கண்டாள்

21. பின்வருவனவற்றுள் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய உறுப்புக்கள் வெளிப்பட்டுத் தோன்றும் வாக்கியம்

1) பத்தில் ஆறு போனால் நான்கு

2) ஆழமறியாமல் காலை விடாதே

3) தருமம் தலை காக்கும்

4) பணம் பாதாளம் மட்டும் பாயும்

22. வாக்கியத்தின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.
விபத்து சற்றுத் தாமதமாக நடந்திருக்குமாயின் கொலம்பியா விண்வெளி ஓடத்தில் பயணித்த விஞ்ஞானிகள் அனைவரும்

1) உயிர் பிழைத்தார்கள் 2) உயிர் பிழைத்திருப்பார்கள்

3) உயிர் பிழைத்திருந்தார்கள் 4) உயிர் பிழைத்துவிட்டனர்

23. குன்றாத மழைவீழ்ச்சியாலும் குறைவற்ற ஆற்றுப் பாய்ச்சலாலும் குருநாகல் மாவட்ட நெல்வயல்களெல்லாம்……………………..காட்சியளிக்கன்றன.

1) கன்னங்கரேரென 2) செக்கச்செவேலேன

3) வெள்ளைவெளேரேன 4) பச்சைப்பசேலென

24. இலங்கை சுதந்திரமடைந்து ஏறத்தாழ ஏழு………………………………ஆகியன.

1) தசாப்தங்கள் 2) சதாப்தங்கள் 3) சகாப்தங்கள் 4) வற்சரங்கள்

25. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) எனினும் இது வசதி படைத்தவர்களுக்கு மட்டும் சாத்தியமாகும்

ஆ) நீரிழிவு நோயாளர்களுக்குச் சிறுநீரகம் அதிகமாகச் செயலிழப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.
இ) மனிதனின் உடல் உள்ளுறுப்புக்களில் சிறுநீரகமும் பிரதான இடத்தை வகிக்கின்றது.

ஈ) இதனைச் சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சை மூலம் மாற்றிக் கொள்ள முடியும்.
உ) இது செயலிழந்தால் மனித வாழ்வு அஸ்தமனமாகும்

1) இ, உ, ஆ, ஈ, அ 2) இ, உ, அ, ஈ, ஆ

3) இ, ஆ, அ, ஈ, உ 4) இ, அ, உ, ஆ, ஈ

(25×1=25 புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி II

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து செய்து 250 சொற்களில்அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

அ) அறிவியல் வளர்ச்சியினால் மருத்துவத்துறை நினைக்க முடியாத அளவுக்குச் சாதனைகளைப் படைத்துள்ளது. பல்வேறு விதமான சிகிச்சை முறைகளும் வகை வகையான மருந்து வில்லைகளும் ஊசி மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பரிசோதனைக் குழாய் குழந்தைப் பேற்று முறை எல்லோரையும் குதூகலிக்கச் செய்துள்ளது. மொத்தத்தில் மரணத்தைத் தடுக்க முடியாவிட்டாலும் வாழும் காலத்தை நீட்டிக்கக் கூடிய அளவுக்கு மருத்துவத்துறை மகத்தான சாதனைகளைக் கண்டிருக்கின்றது. இக்கருத்துக்களை உள்ளடக்கிய **விளக்கக் கட்டுரை.**

ஆ) நகரப் புறங்களில் சனத்தொகை மிக வேகமாக அதிகரித்து வருகின்றது. இதனால் மக்களின் வாழ்விடங்களை அதிகரிக்கம் நோக்கில் அரசாங்கமும் தனியார் துறையும் தொடர்மாடி வீடுகளை அமைக்கும் பணிகளில் தீவிரம் காட்டுகின்றன. எழிலார்ந்த மாடி மனைகள் மக்களை வசீகரித்துக் கொள்ள அவர்களும் அவற்றில் குடியேறி வாழ்ந்து வருகின்றார்கள். இத்தொடர்மாடி மனைகள் மக்களுக்குப் பல வழிகளில் நன்மை செய்தாலும் தீமைகளும் இல்லாமல் இல்லை. இது தொடர்பாக இருவருக்கிடையே நிகழும் **உரையாடல்.**

இ) முதியோர்கள் இந்நாட்டின் விலைமதிக்க முடியாத பொக்கிஷங்கள். சந்தனக் கட்டைகளாகத் தம்மை தேய்த்து மற்றவர்களைப் பரிமளிக்கச் செய்த பண்பாளர்கள். அன்பின் இருப்பிடமாகவும் அனுபவ அறிவின் அடையாளங்களாகவும் இலங்கும் முதியோர்கள் இப்போது அங்காடி வீதிகளிலும் அனாதை இல்லங்களிலும் முதியோர் இல்லங்களிலும் அல்லலுறும் அவலநிலை சொல்லும் தரமன்று. முதியோர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்குரிய மதிப்பும் மரியாதையும் அளிக்கப்பட்டு அவர்கள் போற்றப்பட வேண்டும். இவற்றை வலியுறுத்தும் வகையில் முதியோர் தின விழாவில் நீர் நிகழ்த்தும் **மேடைப் பேச்சு**.

ஈ) செவ்வாய்க்கிரகத்தில் மக்களைக் குடியேற்றுவதற்கான முயற்சிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு அதற்கான ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் செவ்வாய்க்கிரகத்தில் குடியேற்றப்படும் மக்களின் போக்குவரத்து, உணவு. கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட வாழ்க்கை வசதிகள் எவ்வாறு அமையப்போகின்றன என்பது பற்றிய **கற்பனைக் கட்டுரை**.

(20 புள்ளிகள்)


kalvi.lk

3. கீழே தரப்பட்ட உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

கல்வி நமக்குப் பல நன்மைகளைத் தருகின்றது. கல்வியினால் அறிவு வளர்கின்றது. கல்வியால் நாம் தொழில் பெறுகின்றோம். கற்றவர்களை உலகம் மதிக்கின்றது. எல்லவாற்றிலும் மேலாக கல்வி நமக்குக் கடவுள் உண்மையை அறிவுறுத்தி நாம் கடவுளை அடையத் துணை செய்கின்றது. கடவுளை வணங்கத் துணை செய்யாத கல்வி சிறந்த கல்வியாகாது. "கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்பார் திருவள்ளுவர். கல்வியின் மூலம் கடவுளின் குண விஷேடங்களையும் அவரை அன்பு செய்யும் முறைகளையும் அவரை அடைந்தோர் வரலாறுகளையும் அறிகின்றோம். அவ்வாறு அறிவதனால்நமக்குக் கடவுளிடத்தில் அன்பு உண்டாகின்றது. அவ்வன்பு கடவுட் பணியில் நம்மை ஈடுபடுத்துகின்றது. கடவுட் கொள்கையில்லாதவர்கள் கல்வியினால் கடவுள் நம்பிக்கையைப் பெறுகின்றார்கள். கடவுட் கொள்கையுள்ளவர்கள் கல்வியினால் சமய வாழ்வில் ஊக்கம் அடைகின்றார்கள். கல்வியைப் போலவே கடவுட் கொள்கையைப் பெறுவதற்கும் இளமைப்பருவமே ஏற்ற காலமாகும். இளமையிற் பழகிய பழக்கவழக்கங்கள் எக்காலத்திற்கும் நிலைத்து நிற்கும். "தொட்டிலில் பூண்ட குணம் சுடுகாடு மட்டும்" ஆதலினால் நமது பழக்க வழக்கங்களைச் சிறு வயதிலேயே திருந்தியனவாகக் கற்றுக் கொள்ள வேண்டும். கடவுள் நம்பிக்கையையும் கடவுள் தொண்டையும் இளமையிலேயே போதித்தால் அஃது ஒருவரது வாழ்கை முழுவதும் கலந்து நிற்கும். வாழைப்பழத்தில் இலகுவாக ஊசி ஏற்றுவது போல சிறுவர் மனதிலும் கடவுள் நம்பிக்கை நன்கு பதியும். அவ்வாறே நற்பழக்கங்களையும் இளமையிலேயே பழகிக் கொள்ளுதல் எளிதான காரியமாகும். இளமையிற் கற்றுக் கொள்ளாது வயது வந்த பின் நற்பழக்கங்களை மேற்கொள்ளலாமெனில் பொருந்தாது.

(10 புள்ளிகள்)

4. உமது பிரதேச வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகளால் பொதுமக்கள் அடையும் இன்னல்களைச் சுட்டிக்காட்டியும் அவற்றைச் சீர் செய்து உதவுமாறு கோரியும் சுகாதார அமைச்சுச் செயலாளரை விநயமாக வேண்டி 100 சொற்களில் அமையுமாறு ஒரு கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

## பகுதி III

5. சுருக்கமான விடை தருக.

I. நீதிப்பாடல்கள் என்னும் பாடப்பகுதியில் இடம்பெறும் பதினெண் கீழ் கணக்கு நூல்கள் அல்லாத நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

II. "உப்பிலாக் கஞ்சியினை" என்ற பாடலில் இடம்பெறும் முதுமொழி யாது?

III. நாவலர் எழுந்தார் என்னும் கட்டுரையை எழுதியவர் யார்? அவர் இயற்றிய நூல்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

IV. பொழிந்த நெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கன லென்ன எழுந்தார் - இப்பாடலடியின் பொருளைத் தருக.

V. "சேர் பொன் இராமநாதன் இலங்கைச் சட்டசபையில் ஓரிலங்கைச் சிவப்பாயிருந்து விளங்கினார்" இக்கூற்றின் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(5×2=10 புள்ளிகள்)


kalvi.lk

6. பின்வரும் செய்யுளினதும் உரைப்பகுதியினதும் பொருளை உமது மொழிநடையில் எழுதி, அவற்றில் தடித்த எழுத்துக்களிலுள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்குக.

அ) தண்டாமரையினுடன் பிறந்தும்
தண்டேன் நுகரா
மண்டூகம்
வண்டோ கானத்திடையிருந்து
வந்தே கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும்
அறியார் புல்லர் நல்லோரைக்
**கண்டே களித்தங் குறவாடித்**
**தம்மிற் கலப்பர் கற்றோரே**

ஆ) **பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு என்று சொல்லுகின்ற "பிறகு" அந்த சபையில் நிலவியது.** பேச்சு மூச்சு ஒன்றுமில்லை. மேலே கிளம்பின பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்லக் கீழே இறங்கித் தரைமட்டத்திற்கு வந்துவிட்டார்கள். தபால் தந்திக் கட்டுக்கள் நாவலர் அவர்களின் முன்னிலைக்கு வந்து சேரந்தன. ஒருவர் ஒருவராகவோ இருவரிருவராகவோ அன்றிப் பலர் கூட்டங் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம் என்றார் நாவலர் அவர்கள்.

(2×5=10 புள்ளிகள்)

**07, 08, 09 ஆம் வினாக்களுள் விரும்பிய ஒரு வினாவைத் தெரிவு செய்து 150 – 200 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.**

7. (அ) "நீதிப்பாடல்கள்" என்னும் பாடப்பகுதியில் அடக்கம், நட்பு, மனநிறைவு ஆகியவை பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துக்களை விபரிக்குக.

(ஆ) அவை கூறப்படும் முறையிலுள்ள சிறப்புக்களை விளக்கி எழுதுக.

(15 புள்ளிகள்)

8. (அ) "நாவலர் எழுந்தார்" என்னும் கட்டுரையில் கம்பராமாயணப் பாடல் வரிகளைப் பண்டிமணி கணபதிப்பிள்ளை அவர்கள் எடுத்தாண்டதன் பொருத்தப்பாட்டினை விளக்குக.

(ஆ) நாவலர் பெருமானின் திறமை, நேர்மை ஆகியவற்றை வெளிக் கொணர்வதே „நாவலர் எழுந்தார்" என்னும் கட்டுரையின் நோக்கமாகும். இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(15 புள்ளிகள்)

9. பாரதியார் சுயசரிதை என்னும் பாடப்பகுதியில்
- தனது காதல்
- உலகியல் விருப்பங்கள்
- அவற்றை அடைய முடியாமைக்கான காரணங்கள்
- நன்மைகளை அடைவதற்கான வழிமுறைகள்
- தாம் விரும்பியவற்றை அடைய முடியாதவர்களின் இயல்புகள்.

ஆகியவற்றை பாரதியார் மிகத் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார். இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(15 புள்ளிகள்)


kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457